**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.253/2020</u>** **தேதி.12.08.2025**

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.2 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 12.08.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | | **கோவிந்தன்** | இனம் | ஆண் |
| த/பெ. | | துளசி ரெட்டி | ஊர்/வட்டம் | கத்தாரிக்குப்பம்/ஆற்காடு |
| வயது | | 85/2025 | தொழில் | -- |

துவக்க நேரம் 12.55 PM

**சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. எனது சொந்த ஊர் கத்தாரிக்குப்பம் ஆகும். கண்ணண் இறக்கும்பொழுது அவருக்கு வயது என்ன இருக்கும் என்றால் 93 வயதிருக்கும். உயில் சம்பந்தமாக சாட்சி சொல்ல வந்துள்ளேனா என்றால் ஆமாம். உயில் எத்தனை பேப்பரில் எழுதியிருந்தது என்றால் ஒரே பேப்பரில் எழுதியிருந்தது.

2. உயில் எழுதியிருந்த பேப்பர் ஸ்டேம்ப் பேப்பரா, வெள்ளை பேப்பரா என்றால் வெள்ளை பேப்பரில் எழுதி அதன்பிறகு பத்திரத்தில் டைப் செய்யப்பட்டது. முதலில் எழுதிய பேப்பர் என்னவானது என்றால் அது எனக்கு தெரியாது. கண்ணணுக்கும் காது கேட்காது, கண்ணும் தெரியாது என்றால் காதும் கேட்கும், கண்ணும் தெரியும்.

3. உயில் எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்றால் சோளிங்கரில் காலை 10 லிருந்து 11 மணிக்குள் எழுதப்பட்டது. ஸ்டேம்ப் பேப்பர் எங்கு

வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. யார் பெயரில் ஸ்டேம்ப் பேப்பர் வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. யார்யார் சென்றோம் என்றால் நான், கண்ணன் மற்றும் கண்ணன் மனைவி ஜானகி ஆகிய மூவரும் ஆட்டோவில் சென்றோம்.

4. எந்த இடத்தில் வைத்து உயில் எழுதப்பட்டது என்றால் சன்னதி வீதியில் உள்ள வழக்கறிஞர் ஜீவா வீட்டில் எழுதினோம். அங்கேயே பத்திர பதிவு அலுவலகம் இருக்கும்பொழுது, ஏன் அதனை பதிவு செய்யவில்லை என்றால் அது கண்ணனது விருப்பம். வேறு யாரெல்லாம் வழக்கறிஞர் அலுவலகத்தில் இருந்தார்கள் என்றால் நான், கண்ணன், கண்ணன் மனைவி மற்றும் வழக்கறிஞர் ஜீவா , வழக்கறிஞர் ஜீவாவை ஏற்கனவே பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அப்பொழுதுதான் பார்த்தேன். வழக்கறிஞர் ஜீவாவின் வீட்டை எங்களுக்கு எப்படி தெரியும் என்றால் வழக்கறிஞர் ஜீவா வீட்டை ஏற்கனவே கண்ணனுக்கு தெரிந்துள்ளது.

5. வழக்கறிஞர் ஜீவாவிற்கு எத்தனை வயதிருக்கும் என்றால் எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலம் யார் சொல்லி தயார்செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தயார்செய்யப்பட்டது. சோளிங்கரில் உயில் எழுதப்பட்டது என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

6. முதலில் யார் கையெழுத்து போட்டது என்றால் கண்ணன் 03 பேப்பரிலும் கைரேகை வைத்தார். அதன்பிறகு கண்ணன் மனைவி கைரேகை வைத்தார், அதன்பிறகு நான் 2 வது சாட்சி கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணத்தின் (வா.த.சா.ஆ.1) கண்ணன் என்பவரது கைரேகைக்கு முன்பாக மூன்று பக்கத்திலும் பென்சிலால் பெருக்கல் குறி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. கண்ணன் எனக்கு எவ்வளவு நாட்களாக பழக்கம் என்றால் இந்தியாவிற்கு வந்ததிலிருந்து பழக்கம். அவர் இந்தியாவிற்கு வரும்பொழுது அவருக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் 20 வயதிருக்கும். உயிலில் என்னுடைய விலாசம் எழுதியுள்ளேனா என்றால் இல்லை. உயில் ஆவணத்தில், பென்சிலால் பெருக்கல் குறியிட்டு கையெழுத்து பெற்பட்டுள்ளது என்றால் இந்த உயில் ஆவணத்தை எழுதிய நபர் உயில் எழுதிய இடத்தில் இல்லை என்பதா அர்த்தம் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் ஜீவா அலுவலகத்திற்கு ஜீவா வரவில்லை என்றால் சரியல்ல.

8. எத்தனை செண்ட்டுக்கு உயில் எழுதப்பட்டது என்றால் ஏக்கர் 01.15 என்று சொன்னார்கள். உயிலில் கண்டுள்ள சொத்திற்கும் கண்ணனுக்கும் எத்தவித பாத்தியமும் இல்லை என்றாலும், எனவே இந்த உயிலை எழுத எந்தவித அருகதையும் இல்லை என்றாலும், சரியல்ல. இந்த உயில் போலியாக தயாரிக்கப்பட்ட உயில் என்றால் சரியல்ல.

மறு விசாரணை:– இல்லை.

முடிவு நேரம் 01.25 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.